முதலாவது கூடுதல் உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.

நாள். 30.03.2026

O.S No. 158/2022

வா.சா.1- செல்வராஜ்

1,2, 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.

நான் எனது முதன்மை சாட்சியத்தில் பொது வாழ்க்கையில் இருந்த விவரங்களை சொல்லியுள்ளேன் என்றால் சரி. நான் அரசியல் கட்சியில் இருக்கிறேனா என்றால் ஆம் இருக்கிறேன். ஆரம்பகாலத்தில் நான் தி.மு.க வில் மாவட்ட கழக துணைசெயலாளராகவும் அதன் பின் ம.தி.மு.க மாவட்ட துணைசெயலாளராகவும் அதன்பின் பா.ஜ.க. வில் வழக்கறிஞராகவும் உள்ளேன். தற்போது நான் பா.ஜ.க வில் வழக்கறிஞர் அணியில் உள்ளேனா என்றால் வழக்கறிஞராக உள்ளேன் அணியில் இல்லை. தற்போது நான் பா.ஜ,க வில் உள்ளேன். இந்த வழக்கை எங்களுக்காகவும் பொதுமக்களுக்காவும் தாக்கல் செய்துள்ளேன். நாளிதழில் இந்த வழக்கு சம்பந்தமாக விளம்பரம் செய்தேனா என்றால் இல்லை.

நான் வழக்கு தாக்கல் செய்த விவரம் பொதுமக்களுக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்கில் பொதுமக்கள் தரப்பினராக வரவில்லை என்றால் சரி. பிரதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையை நான் படித்து பார்த்தேன் அதன் விவரங்கள் எனக்கு தெரியும். இந்த வழக்கில் எதிருரையை கோட்ட பொறியாளர் தேசிய நெடுஞ்சாலை திருநெல்வேலி தாக்கல் செய்தார் என்றால் சரி. அவர் இந்த வழக்கில் தரப்பினர் இல்லை என்றால் சரி. இயக்குநர் தேசிய நெடுஞ்சாலை நாகர்கோவில் என்று 2ம் பிரதிவாதியாக கட்சி சேர்த்துள்ளேன் என்றால் சரி. நான் பிராதில் சொல்லியுள்ள முகவரியில் 2ம் பிரதி அலுவலகம் இயங்கவில்லை என்றால் சரியல்ல. 2ம் பிரதிக்கும் ரவுண்டான அமைக்கும் வேலைக்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் அவரை தேவையில்லாமல் இந்த வழக்கில்

சேர்த்துள்ளேன் என்றாலும் சரியல்ல. தேசிய நெடுஞ்சாலைபகுதியில் ரவுண்டான அமைந்துள்ளதால் அவரை தரப்பினராக இந்த வழக்கில் சேர்த்துள்ளேன்.

செயற்பொறியாளர் நெடுஞ்சாலை துறை நாகர்கோவில் என்ற அதிகாரியை கமிஷ்னராக நியமனம் செய்து இடைமனு எண்.5/2022 என்று தாக்கல் செய்து அது அனுமதிக்கப்டடது என்றால் சரி. அந்த இடைமனுவில் செயற்பொறியாளர் நெடுஞ்சாலை துறை இல்லை என்று எதிமனுதாரர்கள் கட்சி செய்தார்கள் என்றால் சரியல்ல. அந்த எதிருரையில் கோட்டபொறியாளர் நெடுஞ்சாலை துறை நாகர்கோவில் என்ற அதிகாரி மட்டுமே உண்டு என்றும் செயற்பொறியாளர் இல்லை என்றும் சொல்லபட்டிருந்தது என்றால் சரியல்ல. இடைமனு எண்.5/2022 மனுவில் தாக்கல் செய்த எதிருரையினை நான் படித்து பார்த்தேன். எதிருரையில்கோட்ட பொறியாளர் மட்டுமே உண்டு என்ற விவரம் தெரிந்து கொண்டு நான் தற்போது வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல தற்போது ஞாபகமில்லை.

எதிருரையின் அடிப்படையில் நீதிமன்றம் கோட்ட பொறியாளரை ஆணையராக நியமித்து வழக்கு சொத்தை பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய உத்தரவிடப்பட்டது என்றால் சரியல்ல என்னுடைய மனுவின் அடிப்படையில் பரிகாரம் வழங்கப்பட்டது. ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தை தாக்கல் செய்துள்ளார். அதில் உள்ள விவரங்களை படித்து பார்த்தேன். வரைபட விவரங்கள் எனக்கு தெரியும். அவரது அறிக்கையில் IRC 65-2017 ன் வழிகாட்டுதலுக்கு உட்பட்டு ரவுண்டான அமைக்கபட்டதாகவும் எந்த விதிமீறலும் இல்லை என்று குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரி. அந்த அறிக்கை மற்றும் வரைபடத்திற்கு ஆட்சேபனை தெரிவிக்கவில்லை என்றால் சரி. தொழில்நுட்ப சம்பந்தபட்ட காரணத்தால் எங்களால் ஆட்சேபனை தெரியபடுத்த

முடியவில்லை. ஆணையரை சாட்சியராக விசாரித்து விவரங்களை தெரிந்து கொள்ள முடிவு செய்துள்ளோம். தொழில்நுட்ப காரணமாக ஆட்சேபனை தெரிவிக்க முடியவில்லை என்றும் தெரிந்துகொண்ட பின் ஆட்சேபனை தெரிவிக்க போவதாக நான் மனுதாக்கல் செய்து அனுமதி பெற்றேனா என்றால் இல்லை அதற்கு அவசியம் ஏற்படவில்லை என்பதால் அவ்வாறு செய்யவில்லை.

நான் அனைத்து நீதிமன்றங்களிலும் வழக்காடும் மூத்த வழக்கறிஞர் என்றால் சரி. உரிமையியல் வழக்குகள் குறித்த விவரங்கள் எனக்கு முழுமையாக தெரியும் என்றால் அவவாறு நான் எண்ணுகிறேன். நீதிமன்ற ஆணையர் வரைபடத்திற்கு ஆட்சேபனை தெரிவிக்க குறிப்பிட்ட காலஅவகாசம் நீதிமன்றத்தால் வழங்கபடும் என்றால் சரி. இந்த வழக்கில் அவகாசம் கொடுத்ததாக ஞாபகமில்லை. நீதிமன்றம் கொடுக்கும் அவகாசத்திற்குள் ஆட்சேபனை தெரிவிக்க வேண்டும் என்றால் சரி. தேவைப்பட்டால் நீதிமன்றத்தில் இருந்து உரிய அனுமதி பெற்று பின்னர் தாக்கல் செய்யமுடியும். ஆணையர் அறிக்கையில் சுதந்திரதின வெள்ளி விழா நினைவுதூணை பாதுகாப்பாக ரோட்டில் இடதுபுறமாக வைக்கபட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரி. ஆனால் தற்போது நினைவுதூண் சிதைந்த நிலையில் உள்ளது. தற்போது அந்த நினைவுதூண் அந்த இடத்திலேயே இல்லை. ஆணையர் அறிக்கையில் நினைவுதூண் சேதமடைந்ததாக சொல்லவில்லை என்றால் சரி. ஆனால் நான் சிதைவடைந்த புகைப்படங்களை நீதிமன்றத்தில் பிராதுடன் தாக்கல் செய்துள்ளேன்.

அந்த நினைவுதூண் காணவில்லை என்று சொல்வதற்கு புகார் ஏதும் கொடுத்தேனா என்றால் வழக்கு நிலுவையில் உள்ளதால் கொடுக்கவில்லை. காணவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அதனை நிரூபிக்க

தயாராக உள்ளேன். மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருந்து ரவுண்டானவிற்கு 150 மீட்டர் தொலைவு இருக்குமா என்றால் இல்லை 100 அடி தூரம் மட்டுமே இருக்கும். அதனை நிரூபிக்க நான் தயாராக உள்ளேன் என்றால் சரி. மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருந்து ரவுண்டானவிற்கு 150 மீட்டர் தொலைவு இருக்கும் என்றாலும் நான் வழக்கிற்காக 100 அடி தூரம் என்று மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் அரசு வழக்கறிஞராக பணியாற்றிய காலத்தில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு பலமுறை சென்றுள்ளேன் அதனால் எனக்கு தூரம் தெரியும். மேற்படி விவரத்தை என் பிராதிலோ முதன்மை விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரி அதற்கு அவசியம் இல்லை.

ஆட்சியர் அலுவலகத்திற்கு அருகிலோ ரவுண்டானவுக்கு அருகிலோ ஊர்வலமோ கண்டன பேரணியோ நடத்த அனுமதி இல்லை என்றால் சரியல்ல அனுமதி பெற்று பல போராட்டங்களில் நான் கலந்து கொண்டுள்ளேன். அனுமதி கடிதத்தை தாக்கல் செய்யமுடியுமா என்றால் தற்போது கைவசம் இல்லை. உண்மையில் அவ்வாறு அனுமதி கடிதம் இல்லை என்றாலும் அதனால் பொய்யாக கைவசம் இல்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. ரவுண்டானவுக்கு தென்பக்கமாக போத்தீஸ் ஜவுளிகடை உள்ளது. அந்த ஜவுளிகடையின் மேற்குபுறமாகவும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு எதிர்புறமாகவும் பொதுமக்களுக்கும் வாகனங்களுக்கும் இடையூறு இல்லாமல்உரிய அனுமதி பெற்று போராட்டங்கள் மற்றும் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடத்த இடம் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரி.

சுதந்திரதின வெள்ளிவிழா நினைவுதுாணிற்கு அகலம் 3 அடி இருக்கும் என்றால் சரி. சுதந்திரதின வெள்ளிவிழா நினைவுதுாணை ரவுண்டானவுக்கு நடுவில் வைத்தால்

எதிர்எதிராக வரும் வாகனங்கள் தெரியாமல் விபத்துக்கள் நடக்க வாய்ப்பு உள்ளது என்றால் சரியல்ல எதிர்வழக்குரையில் சுதந்திரதின வெள்ளிவிழா நினைவுதூணை மீண்டும் நிறுவபடும் என்று சொல்லபட்டுள்ளது. ரவுண்டான அமைப்பதற்கு முன்பாக போக்குவரத்து காவல்துறை முழுநேரமாக பணியில் இருந்தார்கள் என்றாலும் ரவுண்டான அமைத்த பின்பு முழுநேர பணியில் இல்லை என்றால் சரியல்ல. தற்போதுவரை அவர்கள் முழுநேர பணியில் உள்ளார்கள். அதற்கான ஆவணத்தை நான் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

ரவுண்டான அமைப்பதற்கு முன்பு 4 பக்கமும் சிக்னல் வைத்திருந்தார்கள் என்றாலும் தற்போது ரவுண்டான அமைத்தபின்பு சிக்னல் இல்லை என்றாலும் ஞாபகமில்லை. ரவுண்டானாவில் போக்குவரத்து காவல்துறையினர் முக்கியமான தலைவர்கள் வந்தாலோ ஏதாவது முக்கிய நிகழ்வுகள் திருவிழாக்களின்போது மட்டுமே இருப்பார்கள் என்றால் சரியல்ல. ரவுண்டான IRC வழிகாட்டுதலுக்கு உட்பட்டு அமைக்கபட்டதால் வாகனங்கள் மெதுவாகதான் செல்லமுடியும்என்றாலும் விபத்து நடக்க வாய்ப்பு இல்லை என்றாலும் சரியல்ல. ஆணையர் சுதந்திரதின வெள்ளிவிழா நினைவுதூணை பார்வையிட்டபோது ஒரு விபத்து ஏற்பட்டது அதற்கான ஆவணங்களை நாங்கள் தாக்கல் செய்யமுடியும். அந்த இடத்தில் விபத்துக்களை தவிர்க்க 4 பேரிகார்டுகள் வைக்கபட்டுள்ளது. அந்த விவரத்தை எனது பிராதிலோ நிருபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரி. அந்த பேரிகார்டுகள் விபத்தை தவிர்க்க வைக்கவில்லை என்றாலும் பொதுவாக வைக்கபட்டது என்றாலும் சரியல்ல. ரவுண்டான சரியாக அமைக்கபடாததால் பேரிகார்டுகள் தற்போதும் வைக்கபட்டுள்ளது. அந்த விவரத்தை எனது பிராதிலோ நிருபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரி.

அரசுவிதிமுறைகள் உட்பட்டு ரவுண்டான வேலை செய்வதற்கான விவரங்கள்

வரைபடம் மற்றும் அந்த மதிப்பீடுகளை குறித்து பலகை வைக்கபட்டது என்றால் சரியல்ல. அவ்வாறு வைக்கபடவே இல்லை. அரசு வழிகாட்டுதல் படி 1 கோடியே 77 லட்சத்தி 51 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்து அந்த பணி முடிக்கபட்டது என்றால் எனக்கு தெரியாது. அந்த பணி முறையாக செய்யபடவில்லை. ஆணையர் பார்வையிட்ட போது விபத்து நடந்ததாக சொல்லும் விவரத்தை ஆணையரிடம் குறித்து கொள்ள சொன்னேனா என்றால் சொன்னேன். குறிப்பாணை தாக்கல் செய்தேனா என்றால் இல்லை ஆனால் விபத்து நடந்ததற்கான புகைப்படம் என்னிடம் உள்ளது. விபத்து விவரத்தை ஆணையர் தெரிவிக்கவில்லை என்ற விவரத்தை நீதிமன்றத்தில் தெரிவித்தேனா என்றால் இல்லை. உண்மையில் நான் சொல்வது போல் விபத்து நடக்காததால் அந்த விவரத்தை ஆணையரிடத்திலும் நீதிமன்றத்திலும் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல.

எனது முதன்மை சாட்சியத்தில் 6 வது பக்கத்தில் சாலைமேம்பாடு குறைகளுடனும் தவறான காரியங்களிலும் நடைபெற்றதாக சொல்லியிருப்பதில் 4 ம் பிரதிக்கு எதிராக நான் காவல்துறையில் புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை. 4 ம் பிரதி இந்த வழக்கில் தரப்பினராக இருப்பதால் தனியாக புகார் கொடுக்கவில்லை. ரவுண்டானா பகுதியில் மக்கள் நடக்கும் நடைபாதை பகுதியில் சேதங்கள் ஏற்பட்டுள்ளதாக சொல்லியுள்ளதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் புகைப்படங்கள் தாக்கல் செய்துள்ளேன். ரவுண்டானா பகுதியில் மக்கள் நடக்கும் நடைபாதை பகுதியில் தற்போது சேதங்கள் ஏற்பட்டுள்ளதாக புகைப்படம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பாதசாரிகள் பயன்படுத்தும் நடைபாதை பகுதியில் மக்கள் உபயோகிக்கிறார்கள் என்றால் எனக்குதெரியாது நான்காரில் செ ல்கிறேன். ரவுண்டான பகுதியில் புல் இருப்பதாக காண்பிக்க தற்போது புகைப்படம் ஏதாவது தாக்கல் செய்யமுடியுமா என்றால் பிராதுடன்

வழக்கு தாக்கல் செய்த காலத்தில் இருந்த நிலையையும் ஆணையர் பார்வையிட்ட போது இருந்த நிலையையும் காட்ட புகைப்படம் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.1 ஆவணத்தில்ஆணையர் பார்வையிட்ட போது எடுத்த புகைப்படங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி.

நான் ரவுண்டானவை சுற்றி பல்வேறு இடங்களுக்கு வாரத்தில் எத்தனை முறை செல்வேன் என்றால் தினமும் 3, 4 முறைகள் செல்வேன். ரவுண்டானவில் வேலை செய்வதற்கு முன்பாக 15 நாட்கள் சோதனைக்காக ரவுண்டான அமைக்கபட்டதை நான் பார்த்தேனா என்றால் எனக்கு அது குறித்து தெரியாது. நான் வழக்கு தாக்கல் செய்த போது 98 சதவீத வேலை முடிந்தது என்றால் சரியல்ல. ரவுண்டான விதிமுறைக்கு அப்பாற்பட்டு கட்டபட்டதாக வேறு எந்த நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்து நிலுவையில் உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. எதிர்வழக்குரையில் 15 நாட்கள் சோதனைக்காக ரவுண்டான அமைக்கபட்டதை குறிப்பிட்டிருந்தது என்றால் எனக்கு தெரியாது.

பொதுமக்களுக்கு ரவுண்டான குறித்து எந்த ஆட்சேபனையும் இல்லை என்றாலும் எந்த துறையிலும் பொதுமக்கள் ஆட்சேபித்து மனுதாக்கல் செய்யவில்லை என்றாலும் இந்த பிரதிகளுக்கும் பொதுமக்களிடம் இருந்த எந்த புகாரும் வரவில்லை என்றாலும் சரியல்ல. வேலை நடந்த காலகட்டத்தில் தினமலர் நாளிதழில் அரைபக்க செய்தி புகைப்படத்துடன் வெளியாகியிருந்தது. தினமலர் நாளிதழில் உள்ள விவரத்தை எனது பிராதிலோ முதன்மை சாட்சியத்திலோ சொல்லவில்லை என்றாலும் அதற்கு ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரிதான். வழக்கு நிலுவையின்போது நாளிதழிலில் வெளியானது. அதற்கு ஆவணம்தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும்.

பொதுமக்களிடம் இருந்து ஆட்சேபனை இல்லாத நிலையில் அவர்களுக்காக இந்த

வழக்கு தாக்கல் செய்ததாக சொல்வது உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல. நாங்களும் இந்த நாட்டின் மக்கள்தான். ரவுண்டான அமைத்ததால் விபத்துக்களோ காற்றுமாசுபாடோ போக்குவரத்து இடையூறோ ஏற்படவில்லை என்றால் சரியல்ல. தற்போதும் போக்குவரத்து இடையூறு ஏற்பட்டு வருகிறது. போக்குவரத்து இடையூறு ஏற்பட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்ய உரிமையியல் நடைமுறை சட்டம் பிரிவு 80 ன் கீழ் வழக்கறிவிப்பு செய்யவில்லை என்றால் சரி. அவசர வழக்காக தாக்கல் செய்ததால் பிரிவு 80 ன் கீழான மனுதாக்கல் செய்து நீதிமன்றத்தில் உரிய அனுமதி பெற்றுள்ளேன். பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய எந்த மூலகாரணமும் இல்லை என்றால் சரியல்ல. அரசு பணம் நஷ்டபடுத்தபட்டதால் இந்த வழக்கு தாக்கல் செய்யபட்டது. அரசுபணம் முறையாக செயல்படுத்தாமல் நஷ்டமடைந்ததை காட்ட ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. வழக்கில் குறிப்பிட்டுள்ளோம். 2 ம் பிரதிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் அவசிய தரப்பினரை சேர்க்காததால் வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல. எனது முதன்மை விசாரணையில் சொல்லியுள்ள விவரங்கள் தவறானது என்றாலும் அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. அரசியலுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை. இந்த வழக்கு பிரதிகளின் செலவுதொகையுடன் தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

**<u>3 ம் பிரதி தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

3 ம்பிரதிக்கும் இந்த ரவுண்டான வேலைக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல நகரின் மையபகுதியில் நடந்த வேலையில் மாநகராட்சிக்கு சம்பந்தம் இருப்பதாக நாங்கள் எண்ணுகிறோம். அவ்வாறு நாங்கள் எண்ணிதான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம்

என்றால் சரி. உறுதியாக 3ம் பிரதிக்கும் இந்த வேலைக்கும் சம்பந்தம் இருப்பதாக சொல்லமுடியாது என்றால் ஆவணங்கள் எங்கள் கைவசம் இல்லாததால் குறிப்பாக சொல்லமுடியவில்லை. உண்மையில் 3ம்பிரதிக்கும் இந்த ரவுண்டான வேலைக்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் எனது நிருபண வாக்குமூலத்தில் 5 வது பக்கத்தில் 20 வது பாராவில் சொல்லியுள்ள விவரங்கள் இந்த வழக்கிற்கும் 3ம் பிரதிக்கும் சம்பந்தமில்லை என்றாலும் சரியல்ல. 3 வது பிரதிவாதி செய்யும் வேலைக்கு மட்டுமே அவர்கள் சபையில் தீர்மானம் இயற்றி வேலைகள் செய்யபடும் என்றால் நாகர்கோவில் மாநகராட்சிக்கு பகுதியில் நடைபெறும் வேலை என்பதால் அவர்களுக்கு தொடர்பு இருப்பதாக எண்ணுகிறோம். இந்த வேலை சம்பந்தமாக 3 ம்பிரதிக்கு எழுத்துபூர்வமாக கடிதமோ ஆட்சேபனையோ தெரிவிக்கபடவில்லை என்றால் சரி. அவசர வழக்காக தாக்கல் செய்ததால் தெரிவிக்கபடவில்லை.

உண்மையில் இந்த வழக்கு அவசர வழக்காக கருதமுடியாத வழக்கு என்றாலும் 3ம் பிரதிக்கு எந்தவித ஆட்சேபனையும் எழுத்துபூர்வமாக அனுப்பாததால் அதனை மறைக்க அவசர வழக்கு என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மாநகராட்சிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்று சொல்வதால் இந்த கேள்வியே எழவில்லை என்று எண்ணுகிறேன். இந்த வழக்கிலும் முதன்மை விசாரணை வாக்குமூலத்திலும் 3ம் பிரதியை குறித்து சொல்லியுள்ள விவரங்களுக்கும் ரவுண்டானவுக்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. 3ம் பிரதிக்கு எதிராக குறிப்பிட்டு பரிகாரம் ஏதும் கேட்கபடவில்லை என்றால் சரி. 3ம் பிரதியின் வழக்கு செலவுதொகையுடன் இந்த வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.